மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் உபரி நீரை திருப்பிவிட்டு, பத்மநாப புரம் புத்தனார் வாய்க்காலின் கீழுள்ள ஆயக்கட்டுகளின் தேவையை நிறைவு செய்யும் சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப் பட்டன. மீண்டும் இந்தத் திட்டத்தின் தன்மை, நீரியல் தன்மை ஆகியவற்றை அறிய வேண்டுமென்று இரண்டாவது முறையாகப் பார்த்தர்கள். உபரி நீர் மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் எந்தவிதமான பயனும் இல்லை என்ற காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர் கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரும்பவும் மறுமுறை அதை ஆய்வு செய்வதைப் பற்றி அரசு பரிசிலிக்கும்.

பாலாற்றுக்கு ஹோகெனெக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து தண்ணீர்.

* வினா எண் 372—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஹோகெனெக்கல் நீர் வீழ்ச்சியிலிருந்து பாலாற்றுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், விரைவில் தொடங்கப்பட்டு விவசாயத் துக்கு பயனுள்ளதாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னாலும்கூட, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் பல் லாயிரம் விவசாயிகளும், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங் களும் பயன் பெறும் வகையில் இருப்பதால், இதற்காக ஆகும் திட்ட ம்திப்பீட்டுத் தொகை எவ்வளவு ஆகும் என்பதையும், இதனால் எத்தனை மாவட்டங்களுக்குப் பயன் கிடைக்கின்ற தகுதி உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, ஹோகெனெக்கல் நீர்வீழ்ச்சி காவிரி ஆற்றிலே உள்ளது. அந்த நீர்வீழ்ச்சியிலிருந்து பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் இப்பொழுது அரசினுடைய ஆய்விலே இல்லை.